# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION
(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

L. SENTHIL, B.C.A.,D.C.P.,T.T.C., State President, CELL : 9443082572

J. BARATHAMANI, T.T.C., State General Secretary, CELL : 9003489826

L. MANOHARAN, T.T.C., State Treasurer, CELL : 9442883275

V. KALAIVANAN, B.COM, M.A, PGDCA., Vice Presedent

M. DURAIPANDI, B.A, T.T.C., Joint Secretary

A.M. SATHYAN, Vice President

V. CHANDIRASEKARAN, M.A, M.COM, B.ED., Joint Secretary

M. KARTHIKEYAN, M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L., Founder Adviser

D.A. DHARMARAJ, B.A., Honorary President


24.02.2021

**22-02-2021 அன்று தேர்வு வாரிய தலைவர் அவர்களால் காணொலி காட்சி மூலம் நடத்தப்பட்ட கூட்டத்தின் விவரங்கள் உறுப்பினர்கள் அறிந்துகொள்வதற்காக..**

22.02.2021 அன்று உயர்திரு. ஆணையர், தொழில்நுட்பத் தேர்வு வாரியம் அவர்களால் காணொலி காட்சி மூலமாக கலந்தாய்வுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு நமது சங்க நிர்வாகிகளுக்கும் தேர்வு வாரியத்தால் அழைப்பு விடுக்கப்பட்டது. மாலை சரியாக 4.30 மணியளவிற்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் ஆணையர், கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்), உதவி இயக்குநர் அவர்கள், வட்டார அலுவலர் நெ.2 மற்றும் வட்டார அலுவலர் நெ.4 மற்றும் பிற அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு வந்தோர் அனைவரையும் நமது கூடுதல் இயக்குநர் அவர்கள் வரவேற்று பேசினார்.

**நமது மாநிலச் சங்கத்தின் சார்பாக நமது சங்க பொறுப்பாளர்கள் கீழ்க்கண்ட ஆணித்தரமான கோரிக்கைகளை வலியுறுத்தினார்கள்: -**

- தட்டச்சுத் தேர்வினை வழக்கம்போல தட்டச்சுப் பொறியில்தான் நடத்தப்படவேண்டும் எனவும், தட்டச்சுத் தேர்வில் கலந்துகொள்பவர்களில் விருப்பம் உள்ளவர்கள் கணனியிலும் தேர்வு எழுதலாம் என்ற அறிவிப்பினை வெளியிடக்கூடாது எனவும், மாணாக்கர்கள் மத்தியில் அவர்கள் விருப்பமில்லாமலேயே திணிக்கப்படக் கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டது.

- தட்டச்சுத் தேர்வினை கணனியில் நடத்திய பிற மாநிலங்களை உதாரணம் காட்டியும், அந்த மாநிலங்களிலெல்லாம் தட்டச்சுக் கல்வி பயில்வோரின் எண்ணிக்கை மிகச்சொற்ப அளவில் உள்ளதையும் எடுத்துக் கூறப்பட்டது. தமிழகத்தில் மட்டுமே 2 ½ லட்சத்திற்கும் அதிகமான மாணாக்கர்கள் தட்டச்சுத் தேர்வில் கலந்துகொள்கின்றார்கள் என்றும் எடுத்துக் கூறப்பட்டது. தட்டச்சுப் பொறியின் மூலம் பயின்றவர்களாலேயே அனைத்து அரசு அலுவலகங்களிலும் மிகத் திறனாக கணனியை இயக்கி வேகமாகவும், பிழையின்றியும் தட்டச்சு செய்ய இயலுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் தமிழக மாணவர்கள் இந்தியாவில் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள் என்பதையும் விவரிக்கப்பட்டது.

எனவே எக்காரணம் கொண்டும் தட்டச்சுப் பொறியில் தேர்வு நடத்தும் முறையை மாற்றிட வேண்டாம் எனவும் வலியுறுத்தப்பட்டது.

- தட்டச்சு சீனியர் தேர்விற்கு கூடுதலாக ஒரு அணி ( V – Batch) நீண்ட நெடுநாளாக கேட்கப்பட்டு வருகிறது. எனவே அதற்கான உத்திரவை வழங்கிட வேண்டியும் உயர்திரு. ஆணையர் அவர்களிடம் கூறப்பட்டது. ஆணையர் அவர்கள் பரிசீலிப்பதாக கூறினார்.

- மேலும் வரக்கூடிய தட்டச்சுத் தேர்விற்கான விண்ணப்ப படிவத்தில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் அதன் மாதிரியை முன்னமே எங்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும் எனவும், நுழைவுச்சீட்டினை எடுப்பதற்கு மாணாக்கர்களின் அலைபேசி எண்ணை கொடுத்து OTP முறையினை அமுல்படுத்திட வேண்டாம் எனவும், இதற்கு முன்பாக கம்ப்யூட்டர் ஆபீஸ் ஆட்டோமேசன் தேர்வின்போது OTP முறையினை அமுல்படுத்தியபோது எங்களது மாநில சங்கத்தின் மூலமாக உயர்கல்வித்துறை செயலாளரை சந்தித்து OTP முறை அகற்றப்பட்டது எனவும் விளக்கப்பட்டது.

- மேலும் கடந்த ஓராண்டு காலமாக தட்டச்சுத் தேர்விற்கு தயாராகி தேர்வினை எதிர்நோக்கி காத்திருக்கும் லட்சக்கணக்கான மாணாக்கர்களின் நிலையினை கருத்திற்கொண்டு உடனடியாக தட்டச்சு / சுருக்கெழுத்து தேர்வுகளை நடத்திட வேண்டும் என ஆணையர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. உயர்திரு ஆணையர் அவர்களும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

- கம்ப்யூட்டர் ஆபீஸ் ஆட்டோமேசன் தேர்விற்கு மாணவர்கள் பயிற்சி பெற்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். புதிய அரசாணையின்படி பிப்ரவரி மாதம் நடைபெற வேண்டிய கம்ப்யூட்டர் ஆபீஸ் ஆட்டோமேசன் தேர்விற்கான அறிவிப்பு இதுவரை வெளியிடப்படவில்லை எனவும், உடனடியாக நடவடிக்கை எடுத்து தேர்வினை நடத்திட ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

- சுருக்கெழுத்துத் தேர்வில் வேகப்பயிற்சி வாசிப்பினை டிஜிட்டல் முறையில் அமுல்படுத்திட வேண்டி நமது சங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகவே வலியுறுத்தி வந்துள்ளது அனைவரும் அறிந்ததே.

- கம்ப்யூட்டர் ஆபிஸ் ஆட்டோமேசன் பயிற்சிக்கான புத்தகத்தையும் தேர்வு வாரியம் வெளியிட வேண்டும் எனவும், இந்தப் பயிற்சிக்கென்று பிரத்யோக புத்தகம் இல்லாததாலும், வினாத்தாள் மிகவும் கடினமாக முறையில் எடுக்கப்படுவதாலும் ஏராளமான மாணாக்கர்கள் தேர்வில் தோல்வியடையும் நிலை உள்ளதையும் வலியுறுத்தப்பட்டது.

- குறிப்பாக தட்டச்சுத் தேர்வினை கணனியிலும் கொண்டுவரலாம் என்ற கருத்தினை ஆதரித்து பாண்டிச்சேரியை மற்றும் நாமக்கல்லைச் சேர்ந்த ஒருவருமே தெரிவித்தார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கின்றோம்.

- மேற்படி கூட்டத்தில் டி.டி.சி. பயிற்சிக்கான அறிவிப்பினை வெளியிடுமாறு கேட்கப்பட்டது. அதற்கும் ஆவன செய்யப்படும் என ஆணையர் அவர்கள் தெரிவித்தார்.

- மேலும் தற்போது மிகவும் துரிதமாக தட்டச்சுப் பயிலகங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அனைத்துத் தட்டச்சுப் பயிலகங்களும் இந்த மாத இறுதிக்குள் ஆய்வு முடிக்கப்பட்டு உடனடியாக அங்கீகார புதுப்பித்தலுக்கான ஆணை வழங்கப்படும் எனவும் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

- சுருக்கெழுத்து உயர்வேகத்திற்கான தேர்வு மையம் மற்றும் சுருக்கெழுத்து விடைத்தாள் மையம் சென்னையில் மட்டுமல்லாமல் மதுரையிலும் அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டு அதற்கும் உயர்திரு. ஆணையர் அவர்கள் பரிசீலிப்பதாகக் கூறியது மகிழ்ச்சியை அளிக்கிறது.

நீண்ட நெடுநாட்களுக்குப் பிறகு நமது ஆணையர் அவர்கள் நமது குறைகளை செவிகொடுத்து கேட்ட நிகழ்வு உண்மையிலேயே மனதிற்கு ஆறுதலாக உள்ளது. மற்றுமொரு நிகழ்வில் மிக விரைவில் நேரில் அழைத்து கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி நம்முடைய குறைகளை களைய நடவடிக்கை எடுப்பதாக உயர்திரு. ஆணையர் அவர்கள் அறிவித்தமை குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். நமது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்ட பார்வையோடு பணியாற்றிவரும் வட்டார அலுவலர் நெ.2 அவர்களுக்கும், வட்டார அலுவலர் நெ.4 அவர்களுக்கும், மற்றும் நமது தொழிலுக்காக பணியாற்றி வரும் இதர அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் நாம் மிகுந்த நன்றிக்கடன் பட்டவர்களாவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த கலந்தாய்வுக்கூட்டத்தினை சிறப்பாக அமைத்துக் கொடுத்த கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்) மற்றும் உதவி இயக்குநர் அவர்களுக்கும் நமது சங்கத்தின் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தட்டச்சுத் தேர்வில் கடந்த நான்கைந்து வருடங்களாகத்தான் அதிக அளவில் மாணாக்கர்கள் கலந்துகொண்டு வருகின்றனர். இதன் காரணமாக தமிழகத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கானோர் அரசு வேலைவாய்ப்பினை பெற்று வந்துள்ளனர். இதனால் தமிழகத்தில் உள்ள அனைத்து தட்டச்சு பயிலகங்களிலும் அதிக அளவில் மாணாக்கர்கள் சேர்ந்து பயிலும் நிலை உள்ளது. இந்நிலையில் தட்டச்சுத் தேர்வினை கணனியில் கொண்டு வரும் திட்டத்தினை அமுல்படுத்தினால் இந்தத் தொழிலையே நம்பியிருக்கும் நம் தட்டச்சுக் குடும்பங்களின் நிலை என்னவாவது? எனவே அனைத்து உறுப்பினர்களின் வாழ்வின் ஒளி மங்காவண்ணம் தேர்வு வாரியமும், தமிழக அரசும் நமது எதிர்காலம் பாதிக்காவண்ணம் நல்லதொரு முடிவினை எடுக்கும் என்ற நம்பிக்கை இக்கூட்டத்தின் வரியலாக நமக்கு கிடைத்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே தட்டச்சு/சுருக்கெழுத்து பயிற்சி முடித்து காத்துக்கொண்டிருக்கும் லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்கால கேள்விக்கு இன்னும் ஓரிரு தினங்களில் நல்லதொரு முடிவு கிட்டும் எனவும், தட்டச்சு/சுருக்கெழுத்து/கம்ப்யூட்டர் ஆபீஸ் ஆட்டோமேசன் தேர்வுகள் நடத்திட தேர்வு வாரியத்தால் மிக விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உறுப்பினர்கள் அனைவரும் தேர்விற்கான ஆயத்தப்பணிகளில் ஈடுபடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சங்கங்கள் வெவ்வேறாக இருப்பினும் நம் அனைவரின் இலக்கு ஒன்றுதான் என்பதை தயவுசெய்து அனைவரும் உணரவேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| L. செந்தில்<br>மாநிலத்தலைவர் | J. பரதமணி<br>மாநிலச் செயலாளர் | L. மனோகரன்<br>மாநிலப் பொருளாளர் |